## *DEPOSITION OF WITNESS*

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*

*CC.No.92/2024 – P.W. 7 (LW -9 )*

| | |
|---|---|
| *Name* | சீமான் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | கோவிந்தசாமி |
| *Village* | சென்னை மாநகரம் கண்ணகி நகர் |
| *Taluk* | சென்னை |
| *Religion* | |
| *Age* | *59* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.02.2026*

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை மாநகரம் கண்ணகி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.04.2024-ம் தேதி 6.50 மணிக்கு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலின்படி அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் நிலையம் வந்து பெற்று காவல் நிலைய குற்ற எண்.58/2024 பிரிவுகள் 294(பி),324, 506(2) இ.த.ச. வின் வழக்கு வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

**2.** பின்னர் 13.04.2024-ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்கதுரை மற்றும் ராஜ்மோகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன்.( **மாதிரிவரைபடம் அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 மற்றும் பார்வைமகசர் சாட்சிகளான 6 மற்றும் 7 ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிச்சென்றபோது, 13.04.2024-ம் தேதி 08.30 மணிக்கு தேவதானம் ஐய்யனார் கோவில் அருகில் நின்றுக்கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பாபு என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. சிலம்பரசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(பி),324, 506(2) இ.த.ச. வின் கீழ் கடந்த 05.06.2024-ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் கடந்த 10.04.2024 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது 12.04.2024 என்றால் சரிதான். 2 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் பாபு மீது எங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கானது ராஜலெட்சுமி என்பவரை பாபு என்பவர் கொலை முயற்சி செய்யததாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதில் இவ்வழக்கின் 2 ம் எதிரி தாமஸ் கண்ணுற்ற சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் புகார்தாரர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின்படி காணாமல் போனதாக சொல்லப்படும் பைப்புகளை ஜான் என்பவர் சொல்லியதன்பேரில் புகார்தாரர் அவரது வீட்டில் வைத்திருந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1 ம் எதிரி பொதுப்பணித்துறை ஒப்பந்த தொழிலாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். குடிநீர் குழாய் திட்ட பைப்புகளை முறைபடுத்தி அந்த வேலைகளை கண்காணிப்பது அவரது வேலை என்றால் சரிதான். பாபு என்னிடம் கொடுத்த புகாரின்படியும், எனது விசாரணையின்படியும் பாபு என்பவருக்கு கண்ணில் மட்டும் தான் காயம் எற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . வேறு எந்த இடத்திலும் காயம் இருந்ததாகவோ எதிரிகள் தாக்கியதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவ இடமானது அஹ்ரகாரத்தெரு என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான நபர்கள் சங்கேத்தி வாய்க்காலை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

இரண்டும் வேறவேறு தெருக்கள் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நோயாளி சிகிச்சைக்கு வந்த நேரமாக கடந்த 10.04.2024 ம் தேதி காலை 8.30 AM என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவமானது கடந்த 10.04.2024-ம் தேதி மாலை 6.30 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் ஐய்யனார் கோவில் அருகில் தான் சம்பவம் நடைபெற்றதாக மருத்துவரிடம் புகார்தாரர் கூறியுள்ளார் என்றால் சரிதான். தேவதான கிராமத்தில் ஐய்யானர் கோவில் தனியதாகவும், ஐய்யனார் குளம் என்பது தனியாகவும் உள்ளது என்றால் சரிதான். இரண்டிற்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். ஐய்யானர் கோவில் குளத்தை சுற்றி படித்துறை எதுவும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருந்து இருந்தால் மாதிரிவரைபடத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரிதான்.

4. பாபு என்பவர் குடிநீர் திட்ட குழாய் பதிப்பது குறித்து அதன் அதிகாரிகளிடம் பிரச்சனை செய்தது குறித்து புகார் என்னிடம் வந்ததாக என்றால் புகார் வந்தது அதுக்குறித்து CSR பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கில் எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 குடிநீர் திட்ட குழாய்களை எடுத்து வைத்திருந்ததை கேட்க சென்ற பொதுப்பணிதுறை ஒப்பந்த ஊழியரான எதிரி2 ஐயும், அவரது குடும்பத்தினரையும் தாக்க சென்றபோத தவறி கீழே விழுந்து அதன் மூலம் ஏற்பட்ட காயத்தை வைத்து கொடுக்கப்பட்ட பொய்யான புகாரில் பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.